டில்கா
வாச் வேக்ஸ்
Dilka Watch Works
யாழ் நகரில் சகல மணிக்கூடுகளையும்
திருத்தவும் புதிதாக வாங்கவும்
விஜயம் செய்யுங்கள்.

டில்கா வாச் வேக்ஸ்
பஸ் நிலைய எதிர் மேல் மாடி
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8174



விலை: சதம் 75 ★★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 புரட்டாதி 3 துல்ஹஃ 19 இதழ் 217
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 19 9-1981



தரத்தினில் சிறந்த
மான் - முயல் - வரிக்குதிரை
யானை - விளக்கு
சந்திரிக்கா - பூ
புலிமார்க் ஒடுகளையே

பாவியுங்கள்

மு.தா.பொன்னம்பலம்
36, கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்
போன்: 7498


### வல்லையில் நேற்றுக் காலை பஸ் வழிமறிக்கப்பட்டு நிகழ்ந்த பயங்கரம்

# கைதிகள் மீது துப்பாக்கிச் சூடு!

# மூவர் கொலை, ஒருவர் படுகாயம்!!

## முகமூடி அணிந்த கோஷ்டியின் வெறியாட்டம்

[ நமது நிருபர்கள் திரு, மாணிக்கம், ரவி ]

யாழ்-பருத்தித்துறை வீதி, வல்லை வெளியில் நேற்று அதிகாலை எட்டரை மணியளவில் ஒரு பஸ் முகமூடிக் கோஷ்டியொன்றினால் துப்பாக்கிமுனையில் வழிமறிக்கப்பட்டு, நடத்திய வெறியாட்டத்தில் மூன்று கைதிகள் கோரமாகப் பலியானார்கள்.

நீதிமன்றத்துக்கு சிறைக்காவலர்களின் பாதுகாப்புடன் பஸ்ஸில் போய்க் கொண்டிருந்த கம்பர்மலைக் கொலைவழக்குத் தொடர்பான சந்தேகநபர்கள் அறுவரில் மூன்றுபேரையே முகமூடியணிந்த கோஷ்டி துப்பாக்கியால் சுட்டும், வெட்டியும் உள்ளது. மூவரும் ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளனர். ஒருவர் பலத்த காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஒருவரைக் காணவில்லையென்று கூறப்படுகின்றது. மற்றவர் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்.

இதுபற்றிக் கூறப்படுவதாவது;

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைநோக்கி நேற்றுக் காலை புறப்பட்ட பருத்தித்துறை டிப்போவைச் சேர்ந்த [பாதை இல: 750] 23ஸ்ரீ 5275 பஸ்ஸில் கைவிலங்கு இடப்பட்ட நிலையில் 6 சந்தேகநபர்கள் வழக்கு விசாரணை சம்பந்தமாக பருத்தித்துறை நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லப்படுகின்றனர்.

சிறைச்சாலைப் பாதுகாப்பு உத்தியோகத்தரின் பாதுகாப்புடன் கொண்டு செல்லப்பட்ட இவர்களின் பெயர்கள் வருமாறு:

இராசதுரை அப்புத்துரை, இராசதுரை துரைராசா, இராசதுரை தேவராசா, இராசதுரை தங்கராசா, வே மகேந்திரன், சின்னத்துரை தில்லை நடராசா.

வல்லை, உப்புரோட்டுக்கு ஊடாக இந்த பஸ் சென்று கொண்டிருந்தபோது, முகமூடி அணிந்த 12 பேர் கொண்ட கோஷ்டி பஸ்ஸை மறிக்க முற்படுகிறது. பஸ் நிறுத்தப்படாமல் தொடர்ந்து சென்று கொண்டிருக்கவே பஸ்ஸின் முன் டயருக்கு இக் கோஷ்டியிலிருந்து துப்பாக்கி வேட்டு விழுகிறது. இதனைத் தொடர்ந்து பஸ் நிறுத்தப்படுகிறது.

பஸ்ஸுக்குள்ளிருந்த பிரயாணிகள் கிலி கொண்டு அவசர அவசரமாக பஸ்ஸிலிருந்து இறங்கி அங்குமிங்குமாக சிதறி ஓடத்தொடங்கினர்.

இவர்களுடன் 6 கைதிகளும் பீதிகொண்டு ஓடத்தொடங்கவே, இவர்களை நோக்கி முகமூடி அணிந்த கோஷ்டியினர் 'டுமீல் டுமீல்' என்று துப்பாக்கியால் ஓட ஓட சுடத் தொடங்குகின்றனர்

பிரயாணிகள் செய்வதறியாமல் திகைக்கின்றனர். முடிந்த தூரம் வரை ஓடுகின்றனர்.

சிலமணி நேரத்துக்குள் அந்

[6-ம் பக்கம் பார்க்க]

யாழ்ப்பாணத்தில்

## பாவனைக்குதவாத 17 மூடை அரிசி

### அதிகாரிகளிடம் சிக்கியது

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் நெசவு சந்தைப்படுத்தும் திணைக்களத்தின் விற்பனை நிலையத்தில் மக்கள் பாவனைக்குதவாத அரிசி விற்பனைக்கிருந்ததை அதிகாரிகள் கண்டுபிடித்திருப்பதாகத் தெரிகின்றது.

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபருக்கு பொதுமக்களிடமிருந்து கிடைத்த புகார்களையடுத்து, அவரது பணிப்பின் பேரில் யாழ். உள்நாட்டு விற்பனைத்திணைக்கள உதவி ஆணையாளர் திரு. த. மார்க்கண்டு தமது அதிகாரிகளோடும் யாழ் மாநகரசபை சுகாதாரப்பகுதி பரிசோதகர் மற்றும் அதிகாரிகளோடும் மேற்படி நிலையத்துக்கு திடீர்விஜயம்செய்து பரிசோதனை நடத்தினர்.

பாவனைக்குதவாத 17 மூடை அரிசி கண்டுபிடிக்கப்பட்டதாகவும், இவ்வரிசியின் மாதிரியை

[6ம் பக்கம் பார்க்க]

## மா, பாண் விலை அதிகரிப்பு! சீனி விலை குறைப்பு

[கொழும்பு]

மாவின் விலை கிலோ ஒன்று ரூ 1-15 சதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று பாண் விலையும் [450 கிறாம்] 40 சதத்தினால் உயர்ந்துள்ளது

சீனி ஒரு கிலோ ஒரு ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது.

புதிய விலைகள்; ஒரு கிலோ சீனி- ரூ 15-50 சதம், ஒரு கிலோ மா ரூ. 6-50 சதம், பாண் ரூ. 2-70 சதம்.

புதியவிலைகள் உடனடியாக அமுலுக்கு வந்துள்ளன.

## விழா ரத்து

[யாழ்ப்பாணம்]

அமரர் ..ன்னியசிங்கத்தின் 23 வது ஆண்டு நினைவுநாள் விழா இன்று மாலை புத்தூர் கிழக்கில் சட்டத்தரணி திரு. ச. லோகேஸ்வரன் தலைமையில் நடைபெறவிருந்தபோதிலும் பொலிஸ் அனுமதிகிடைக்காததால் விழா கைவிடப்பட்டுள்ளது. [கு]


கே. ஜி. இண்டஸ்ரீஸாரின்
பிளாஸ்டிக் பொருட்களின் வடபகுதி
ஏக ஏஜண்டாக நியமிக்கப்பட்டுள்ளோம்
என்பதை மகிழ்ச்சியுடன்
அறியத்தருகின்றோம்.

★ வாளிகள்
★ பேசன்கள்
★ கோப்பைகள்
★ ஜாடிகள்

மற்றும் பல வீட்டுப் பாவனைப் பொருட்கள்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

வியாபாரிகளுக்கு தகுந்த கழிவு
வழங்கப்படும்.

லைடன் ட்ரேட்ஸ்
(சேகரம் கட்டிடம்)
188/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8162


கோண்டாவிலில்

## ரூ. 2 கோடி செலவில் துணி பதனிடும் ஆலை!

[சுண்டிக்குளி]

கைத்தறித்துணிகள் பதனிடும் ஆலை ஒன்று இரண்டு கோடி ரூபா செலவில் கோண்டாவிலில் நிறுவப்பட்டுள்ளது.

இந்த ஆலைக்கான யந்திர சாதனங்கள் ஜப்பானில் இருந்து தருவிக்கப்பட்டு ஜப்பான் யந்திரப் பொறியியலாளர்களாலேயே பொருத்தப் படவுள்ளதாகவும் இதன் மூலம் இறக்குமதித் துணிகளின் மவுசு வெகுவாகக்குறையுமென்றும் இதனால் வெளிநாட்டுச்செலாவணி மீதப்படுத்தப்படுமென்றும் யாழ் மாவட்ட புடவை நிறுவனக் கூட்டுறவுச்சங்கத் தலைவர் திரு. எஸ். விசுவலிங்கம் தெரிவித்தார்.

கொழும்புக்கு அடுத்ததாக விளங்கப்போகும் இந்த ஆலை செயல்படத் தொடங்கியதும் யாழ். மாவட்டத்தில் செயலிழந்து கிடக்கும் கைத்தறி நெசவாலைகள் புத்துயிர் பெறுமெனவும் இங்கிருந்து கொழும்புக்குச் செல்லும் கைத்தறி நெசவு துணிமணிகளுக்கு இங்கேயே நல்ல எதிர்காலம் இருக்குமென்றும் திரு, விசுவலிங்கம் தெரிவித்தார்,

## தீராத நோய்: மூதாட்டி தற்கொலை

(யாழ்ப்பாணம்)

தீராத நோயினால் மன விரக்தியடைந்த 72 வயது மூதாட்டி கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

புங்குடுதீவு 7-ம் வட்டாரத்தைச் சேர்ந்த சின்னையா கைம்பெண் இராசாமியின் மரணவிசாரணையின் போது மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

புங்குடுதீவு மரண விசாரணை அதிகாரி திரு. நா. ஆ. தமிழ்ச்செல்வன் மரணவிசாரணை நடத்தினார்.

விசாரணையின்பின் பின் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (கு-வி)

## ஆலயத்திற்கு அருகாமையில் அனாதரவு நிலையில் சிசு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கொத்துக்குள முத்துமாரியம்மன் ஆலயத்திற்கு அருகாமையிலுள்ள வயல் வெளி ஒன்றில் இரண்டு நாள் ஆண் சிசு ஒன்று கொட்டும் மழையில் அனாதரவான நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

திரு. த. கனகசிங்கம் தன் வயலுக்கு சென்றபோது கடும் மழை பெய்தது. அப்போது "குவா" "குவா" என்ற சத்தம் கேட்டு அவர் திரும்பி பார்த்தபோது ஆண் சிசு ஒன்று மழையில் நனைந்த நிலையில் காணப்பட்டது.

உடனே சிசுவை எடுத்து தனது வீடு சென்ற அந்நபர் வைத்தியரை அழைத்து முதலுதவி அளித்தபின்பு மட்டக்களப்பு பொலிசிற்கு செய்த

(5ம் பக்கம் பார்க்க)

## பனம் விதைகள் தேவை

பனம் விதைகளை 7 சதப்படி கொள்வனவு செய்ய பனம்பொருள் அபிவிருத்திச் சபை முன்வந்துள்ளது. வழங்கவிரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்,
பனம்பொருள்
அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்புச்
செயலகம்,
கண்டி வீதி,
யாழ்ப்பாணம். 0981

# வரி விளம்பரம்

### தேவை

கல்முனை கார்மேல் பாத்திமாக் கல்லூரியில் பரதநாட்டியம் கற்பிக்க ஆசிரியை தேவை. தகுதியானவர் கீழ் வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும். அதிபர், கார்மேல் பாத்திமாக் கல்லூரி, கல்முனை. 0954

கொடிகாமத்துக்கும் பளைக்கும் இடையில் போக்குவரத்துக்கு வசதியாக பிரதான வீதிக்கருகாமையில் 25 ஏக்கருக்குக் குறையாத தென்னந்தோட்டம் விலைக்குத் தேவை. தொடர்புகொள்ளவும்:- இல: 9, கதீட்ரல் வீதி, யாழ்ப்பாணம். போன்: 8128. (0945)

### பயிற்சி

வெல்டிங், மோட்டோர் மெக்கானிசம், வயறிங் வகுப்புகள் (செய்முறையுடன்) ஆரம்பம்: C. E. T. யாழ்ப்பாணம் கல்வி நிலையம், [சாந்தி இனிமா விற்கு முன்] 22, ராமையா செட்டியார் வீதி, யாழ்ப்பாணம். 0975

யாழ்ப்பாண அக்கடமி
க.பொ.த உயர்தர பரீட்சை
ஏப்பிரல் 1982

### மீட்டல் வகுப்புகள்

வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன இன்னும் சில இடங்கள் மட்டுமே உண்டு சேர விரும்புவோர் உடன் சேரவும். 1981 பரீட்சை பெறுபேறுகளின் பின் மேலதிக வகுப்புகள் ஆரம்பமாகமாட்டா.

அதிபர்
தொலைபேசி எண்: 617.
376, பிரதான வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
0946

### விற்பனைக்கு

British Leyland Van LD 7. FG 350 27 ஸ்ரீ விற்பனைக்கு உண்டு. 22, சோமசுந்தரம் அவெனியூ, சுண்டிக்குளி. 0971

சுழிபுரம் சந்தியிலிருந்து 200 யார் தூரத்தில், யாழ்ப்பாணம் - காரைநகர் பிரதான வீதிக்கு அருகாமையில் தோட்டப்புறத்தில் 5 பரப்பும் ஓர் வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி பூ. நடராசா, முகாந்திரம் ஒழுங்கை. மல்லாகம். 0973

நவீன முறையில் பனைமரத்தினால் தயாரிக்கப்பட்ட வரவேற்பு மேசை, பீங்கான்கள், கதிரைகள் பரிமாறும் கோப்பைகள், தண்ணீர் குடிக்கும் கிளாஸ்கள், கரண்டிகள், முள்ளுக்கரண்டிகள், கத்திகள், ஒரு ஹோட்டலுக்குத் தகுந்த 25 கொத்து உழுந்து அரைக்கக்கூடிய மா அரைக்கும் இயந்திரம். தொடர்பு: 241, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (0959)

கல்வியங்காடு நியூ செம்மணி வீதியில் வீடு கட்டுவதற்குரிய ஏழு பரப்புக்காணி, சுமார் முப்பது காய்க்கும் தென்னை மரங்களுடன் உடனடியாக விற்பனைக்குண்டு தொடர்பு கொள்க என். கே. குலசிங்கம், அம்மன் கோவிலடி, பருத்தித்துறை வீதி. கல்வியங்காடு, யாழ்ப்பாணம். 0955

உறுதியான பெரிய இரும்புப் பெட்டகம். 12 லாச்சி உள்ளது 5½ அடி உயரம் 2¾ அடி அகலம் நகைக்கடை அடைவு கடைபாவனைக்கு ஏற்றது உடன் பார்வையிடவும். பாலன் நகைக்கடை, 74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் 0974

மானிப்பாய் பொன்னம்பலம் வீதியில் உள்ள 4 பரப்புக்காணி புதிய கிணற்றுடன் உடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு திருமதி, கி. பாலசிங்கம், மணிக்கூட்டு வீதி (பிள்ளையார்கோவில் முன்பாக) யாழ்ப்பாணம். 0943

## ஜனாதிபதிக்கு கவிதை வடிவில் பிரதமர் வாழ்த்து

[கொழும்பு]

ஜனாதிபதியின் 75-வது பிறந்தினத்தையொட்டி பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவும் தன் வாழ்த்தினைத் தெரிவித்துள்ளார்.

இவ்வாழ்த்து, கவிதை வடிவில் பிரதம மந்திரியால் இயற்றப்பட்டுள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சிங்கள சேவை ஒன்றில் நேற்று நடத்தப்பட்ட விசேஷ வாழ்த்து நிகழ்ச்சியின் போதே மேற்படி வாழ்த்துக் கவிதையும் பாடப்பட்டது. [இ]

## தொழில்நுட்பப் பயிற்சி நிலையம்

(பண்டத்தரிப்பு)

சாவிப்பாய் இந்துக் கல்லூரியிற்கு கொழும்பு பிரபல தனியார் வர்த்தக ஸ்தாபனமொன்று தொழில் நுட்ப பயிற்சி நிலையம் ஒன்றை அன்பளிப்பாக திறந்துள்ளது.

சுமார் மூன்று லட்சம் ரூபா செலவில் நவீன வசதிகள் அடங்கியதாக நிறுவப்பட்டுள்ள இக்கட்டிடத்திற்கு "மஸ்கன் சுப்பிரமணியம் ஞாபகார்த்த தொழில் நுட்பக் கல்லூரி" என்று பெயரிடப்பட்டுள்ளது. (கு)

சிறு கைத்தொழிலாளர்களின்
உபயோகத்திற்கு உகந்தது
உடனடி விற்பனைக்கு

★ தன்னியக்கமான, நவீன சாதனங்கள் பொருத்தப்பட்ட
NIVOCITA - GERMAN MAKE
கோப்பியை வறுத்து நொடிப்பொழுதில்
அரைக்கும் இயந்திரம்
முழுமையான சாதனங்களுடன் விற்பனைக்குண்டு.
5-7, பெரியகடை, யாழ்ப்பாணம்.
போன்: 515

மழை கோட்டுகள்!! ஹேர்க்கின்ஸ்!!

சகல அளவுகளிலும்

ரூபா 35/- முதல் ரூபா 250/- வரையான
பல தரப்பட்ட விலைகளில் கிடைக்கும்.

ரூப்சன்ஸ் [ட்ரவல்குட்ஸ்] இன்டஸ்றி

19, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 508
0984

## மூதற்தரத்திலேயே மூன்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை
மாவட்ட நீதிமன்றில்

காலஞ்சென்ற நாகமுத்து இராசரத்தினத்தின் மரணசாதன விடயத்தில்

மரணமெய்தியவர்

இராசரத்தினம் மனைவி பாரிசாதம், கம்பர்மலை, வல்வெட்டித்துறை,

மனுதாரர்

மரணசாதன நியமாதிக்கம் இல: 1109

மேலேயுள்ள இலக்கங்கொண்ட வழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்டவரான மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும் 1981ம் ஆண்டு மாசி மாதம் 11ஆந் நாளன்று அதில் அதற்கிணங்க முதலிலேயே மூற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

நீதிமன்றக் கட்டளைப்படி.

க. செல்வராசா,
பதிவாளர்

1981-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 11-ம் நாளன்று திகதியிடப்பட்டது.

0976

பேராதனைப் பல்கலைக்கழகம்

## (வெளிநிலை) பரீட்சைகள் 1981

1981-ம் கல்வி ஆண்டிற்கு
பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பதிவுசெய்த மாணவர்கள்
கலை, உயிரியல், விஞ்ஞானம், புள்ளிவிபரவியல்
பரீட்சைகளுக்கு 1981 டிசம்பர் மாதத்திலேயே
தோற்றலாம்.
இவர்களது பாடத்திட்டத்தை முடிப்பதற்கு
யாழ்ப்பாணம் 148 1/1, ஸ்ரான்லி வீதியில் உள்ள
வெளிவாரிப் பட்டப்படிப்புகள் நிறுவனத்தில்
தினசரி விரிவுரைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.
21-09-81ல் ஆரம்பமாகும் இவ்விரிவுரைகளில்
பேராதனைப் பல்கலைக்கழகத்தில்
பதிவு செய்துள்ளோர் கலந்துகொள்ளலாம்.
விபரங்கட்கு இயக்குனருடன் தொடர்பு கொள்ளவும்.

0980 பதிவாளர்.

## பனைமரம் நாட்டு இயக்கம்

பனைமரம் நாட்டும் பணிக்கு உதவுமுகமாக தமது காணிகளில் பனம் விதைகளை தொகையாக நாட்ட விரும்புவோர் உடன் தொடர்புகொள்ளவும்.

பொதுமுகாமையாளர்,
பனம்பொருள்
அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்புச்
செயலகம்,
கண்டி வீதி,
யாழ்ப்பாணம். 0982

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## கேள்விப்பத்திர விற்பனை

பின்வரும் காணிகள் விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன:

1. பெரியவிளான் சந்தியிலிருந்து 150 யாருக்கப்பாலுள்ள 17½ பரப்பு முந்திரிகை தோட்ட பனங்காணி.
2. பண்டத்தரிப்புச் சந்தியிலிருந்து 500 யாருக்கு அப்பால் பெரியவிளான் நோக்கிச் செல்கின்ற பாதைக்கருகில் உள்ள 10 பரப்பு தென்னங்காணி.
3. மாசியக்கூடல் முருகமூர்த்தி கோவிலுக்கு முன்னாலுள்ள அத்திவாரமிடப்பட்ட 5 பரப்புக் காணி.
4. இல்லாலை சிகரெட் புகையிலைச் சங்கத்திலிருந்து சம்பல்துறைக்குப் போகும் பாதையில் 100 யாருக்கு அப்பால் உள்ள 3½ பரப்பு தோட்டக்காணியும் பனைகளும்.

மேற்படி காணிகள் பற்றிய தகவல்கள் அதற்கான நிபந்தனைகள் விண்ணப்பப் படிவங்கள் யாவும் பண்டத்தரிப்புப் பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளரிடமிருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப் பத்திர முடிவுத் திகதி: 06-10-1981 காலை 10-00 மணி வரை
கேள்விப் பத்திர முடிவுத் திகதி: 07-10-1981 காலை 10-00 மணி வரை

பொதுமுகாமையாளர்,
பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்கம்,
பண்டத்தரிப்பு.

13-09-1981. (1983)



பெட்டி விலை ரூபா 7 00

### மணிவாக்கு

ஆயிரம் மனிதர்களில் தொளாயிரத்து தொண்ணூற்றொன்பது பேர் அறவழியைப் போற்றிப் போஷிக்கின்றனர்; ஒருவனே அவ்வழியில் நேர்மையாக வாழமுடிகிறது அவனுடன் புழங்குவதே பயன்தரும் செயலாகும்.

—ஹென்றி தோரோ

# நமது நோக்கு

## உலகப்பொருளாதாரமும் நாமும்

வறிய நாடுகளுக்கு நிதி உதவினால் அவைகளின் வறுமையை நீக்கிவிடலாம் என்ற நம்பிக்கையில் உருவானதே அமெரிக்காவில் கொலுவிருக்கும் உலக வங்கி

அன்றையில் அதன் தலைமைப் பதவியிலிருந்து விலகிய திரு. றெபர்ட் மக்னமாரா இந்நம்பிக்கையில் முற்றும் தோய்ந்திருந்ததால் உலகில் பல பகுதிகளிலுமுள்ள வளர்முக நாடுகளுக்குத் தாராளமான நிதி உதவியை அள்ளிச் சொரிந்தார்.

நிதி உதவி அதிகரிக்க, நிதி பெறும் நாடுகள் இன்று மாட்டுவால்போல் வளருகின்றன என்ற ஏமாற்றம் தெரிவிக்கின்றார்.

வெள்ளை உள்ளம் படைத்த முன்னை நாள் உலக வங்கித் தலைவரின் கூற்று முற்றிலும் சரியென்று கொள்வது தவறெனக் கருதப்படுகிறது.

கடந்த இருபது வருடங்களைக் கணக்கில் கொண்டால் வளர்முக நாடுகள் கைத்தொழில் நாடுகளிலும் பார்க்க தங்கள் நிலையில் முன்னேறிவருகின்றனவென்பது உலக வங்கி அறிக்கையின் கருத்தாகும்.

செல்வநாடுகளின் முன்னேற்றம் தடைப்பட்டாலும், வறிய நாடுகள் அவற்றை எட்டிப் பிடிக்க முடியுமென்பதல்ல. வளர்முக நாடுகளின் வாழ்க்கை முறை கண்டிப்பாகத் திருந்தமடைந்திருக்கின்றதென்பது முடிவு

புள்ளி விபரங்கள் பெரும் ஏமாற்றுக்காரப் பேர்வழிகள். அந்நிய செலாவணி அடிப்படையில் நோக்கினால் இலங்கையைப் போன்ற அபிவிருத்தி அடையும் நாடுகள் 'பின்கியரில்' ஓடுவது போல் தெரியும்.

இருப்பினும் அது தவறான கணிப்பென்பது விளங்கக் கூடியது. நாட்டில் உற்பத்தியாகின்ற நாட்டு மக்களின் பாவனைக்குரிய பல அத்தியாவசியமான பொருட்கள் அந்நிய செலாவணி என்ற 'கோட்டைக்குள்' அகப்படுவனவல்ல.

யாழ்ப்பாணத்தில் ஏன் இலங்கையில் எப்பகுதியிலும்-ஒரு கதலி வாழைப் பழம் ஐம்பதுசதமென்றால் அது பாரிஸ் நகரில் நான்கு ரூபாயாகவிருக்கலாம்; ஆனால் பாரிஸ் நகரத்தார் எங்களைக்காட்டிலும் எட்டு மடங்கு வாழைப்பழங்களை உண்கின்றனரென்பது சரியா?

இந்த உதாரண அடிப்படையில் வளர்முகநாடுகளில் செல்வர்கள் அதிகம் செல்வர்களானாலும், வறியவர் வறுமை குன்றி தலை தூக்குமளவிற்கு முன்னேற்றம் காணப்படுவதாகக் கொள்ளப்படுகின்றது. பண வீக்கம் என்ற பிசாசு தலை தூக்குவதாலும், பல பிரமாண்டமான அபிவிருத்தித் திட்டங்களில் உதவியநிதி சிதறுண்டு போவதாலும் இலங்கை போன்ற நாடுகள் கணிசமானமுறையில் முன்னேற முடியவில்லை.

குறிப்பாக இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இருவித தலையிடிகள் காலத்துக்காலம் அபிவிருத்தித் திட்டங்களைச் சின்னாபின்னமாகக் கிழித்துவிடுகின்றன;

1971ல் நடைபெற்ற பயங்கரவாதம், இக்காலத்தில் இடம்பெற்ற வன்செயல்கள் குழப்பநிலைகள் இலங்கைக்கு ஒரு சாபக்கேடு; சுதந்திர இந்தியா பாகிஸ்தானோடும் சீனவோடும் போர்புரிந்த துர்ப்பாக்கியம், அதன்முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாகவிருந்தது; இன்றும் அந்நிலையில் போதியமாற்றம் ஏற்படவில்லை.!

எண்ணெயின் அதிர்ச்சியில இலங்கைக்கு தீங்கு விளைக்குமென அஞ்சத் தேவையில்லை.

வறுமை நிலையை நீக்க உழைப்பும், அதற்கேற்ற ஊதியமும் வாழ்க்கைக்கு ஆதாரமாகும்: ஆனால் தலை நிமிர்ந்து வாழ்க்கைத் தரத்தில் நாம் பின்தள்ளப்படாமலிருப்பதற்கு வெளிநாட்டு ஏற்றுமதி வியாபாரவிருத்தி உள்நாட்டு, வெளிநாட்டு முதலீடுகள் பெருக வழி காணவேண்டுமென்பது ஐ. எம். எவ் சித்தாந்தமாகும்.

தென்கொரியா என்றசிறு நாட்டின் பெருவளர்ச்சியை இதற்கு உதாரணமாகக் காட்டப்படுகிறது!

விவசாயமோ, கைத்தொழிலோ வர்த்தகமோ நாட்டில் ஒற்றுமைப்பட்ட அமைதிவாழ்வு வளர்ச்சிக்கு முதன்மையானது.

## இ. போ. சவும் தனியார் சேவையும்

'பஸ் விபத்தும் தனியார் சேவையும்' என்ற தலைப்பில் கடந்த வியாழக்கிழமை எங்கள் பத்திரிகையில் வெளிவந்த கடிதம் தனியார் சேவையின் அத்தியாவசியமான பணி ஒன்றை நினைவூட்டுகின்றது.

இ. போ ச. வின் நெடுங்கால நோய்க்குஒளஷதமான பரிகாரமாகவே தனியார் சேவைக்கு அரசாங்கம் அனுமதி அளித்ததை நாம் மறக்கலாகாது.

இச்சேவை துரிதப்படுவதால் பிரயாணிகள் பஸ் நிலையங்களிலும் தரிப்புகளிலும் மணித்தியாலக்கணக்கில் தூங்கும் தொல்லை குறைந்திருக்கிறது. இ.போ. ச வின்குறைகளை நிவர்த்தி செய்ய தனியார் சேவை பெரிதும் உதவுகிறது. நாமறிந்த அனுபவம்.

அதே சமயம், இ.போ'ச' வுக்குப் போட்டியாக அதனை அழித்தொழிக்கும் நோக்கத்துடன் சேவைசெருக்கடைந்தால் இத்துறையில் புரட்சிகர மாற்றத்தை பிரயாணிகளே விரும்பிகிளர்ச்சிசெய்வார்கள்.

எனவே ஆயுட்காலம் எவ்வளவு என்று தெரியாததால் அடிக்குந்தனைக்கும் அடித்து விடுவோம், யார் எக்கேடு கெட்டாலும் என்று ஒரு 'புரோகித' பயணிகளுக்கு பிரதிபேகமாக நடக்கும் சேவையாக அமர்ந்தால் கிரகநிலை சடுதியில் மாறும், இது ஒரு அவசிய எச்சரிக்கை.

இதற்கு மாறாக பல தனியார் வண்டிகள் நிதானமான சேவையை நடத்துவது போல் சட்டத்துக்கமைய நடப்படாது, நியாமான வருமானத்தை எதிர்பார்த்து சேவை தொடருமானல் தனியார் சேவைக்கு நன்மதிப்பிருக்கும்.

இ.போ. ச. வின் குறைகளை நிறைவாக்கும் பணியில் ஒத்துழைக்கும் நன்மனம் படைத்த சேவையாளர்களே பஸ்போக்குவரத்து இடர்களை நீக்க வல்லார்.


-தனியார் சேவையின் அவசியத்தை இன்றைய ஆட்சிமதிக்கின்றது. தவிர்க்க முடியாதநிலை காரணமாகலாம். ஆனால் அரசின் கட்டுப்பாடு தளர்ச்சியடைந்தால் தனியார் மருத்துவசேவை, தனியார்கல்விச்சேவை தனியார் வர்த்தகசேவை போன்ற ஸ்தாபனங்கள் நாட்டின் உயிர் நிலையங்களின் தோலிருக்க சுளையை விழுங்கிவிடவல்லவை.

# 'பரவெளித்தத்துவம்' பாலையில் பசுந்தரை

[இன்று புலவர் நா. சிவபாத சுந்தரனாரின் 'பரவெளித் தத்துவம்' நூல் அறிமுக விழா கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய முன்றலில் நடைபெறுகிறது. சிவ நெறிக்கழகம் இவ் விழாவை நடத்துகிறது.]

'உண்மைத் தேட்டங்களும் படைப்புத் துணிவும் நிறைந்த இளமைப்பருவத்திலும் சரி, ஆழ்ந்த சிந்தனைகளையும் அநுபவங்களையும் உண்மை நிலவரங்களையும் நிகழ்ச்சிகளையும் நிதானமாகப் பகுத்தாயும் பான்மை வாய்ந்த பயன்பாடுள்ள படைப்புக்கள் புரியும் முதிர்ந்த பருவத்திலும் சரி; தத்துவம் மனிதனது நம்பகமான வழித்துணையாகும்' என்பர் தத்துவப்புலவர் தனிலேன்கோ. ஆனால் தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபடுவோர் ஏனோ விரல் விட்டெண்ணக் கூடியவர்களாகவே உள்ளனர். ஈடுபடும் ஒரு சிலரிலும் பலர். தான் என்ன சொல்லுகிறேன் என்ற தெளிவிலேதான் பிறர் புரிந்து கொள்ளவும் முடியாத வகையில் உளறுவானால் அவ்வுலறலே தத்துவம்' என்று 'வால்டையர்' கூறும் இலக்கணத்துக்கு ஏற்புடைத்தான நூல்களைப் படைத்துவிட வேண்டுமென்பதிற் தீவிர பிடிவாத முடையோராய் விளங்கக் காண்கிறோம். இத்தகைய தொருநிலையில், பருப்பொருளான இவ்வுலகில் ஒளிக்கரு எவ்வாறு விருத்தியுற்று ஒளிப்பொருளாய் விண்மீன்களாய் விளக்கியது என்பதைப்பற்றிய மேலைத்தேய வான்நூற் புலவோர் அளிக்கும் விளக்கங்களோடு சைவசித்தாந்தம் கூறும் சிவதத்துவம் எப்படி இயைபுற்று விளங்குகிறது என்பதை ஒப்பிட்டு ஆய்வு செய்யும் நூலொன்று பாலைவனத்திடைப் பசுந்தரையாகக் காட்சி தருகிறது.

எல்லாத்துறைகளிலும் இன்று ஏற்பட்டுள்ள மாற்றங்களை அதிக ஆழத்தில் புகுந்து காண்பதற்கு விஞ்ஞானக் கண்ணோட்டம் இன்றியமையாதது. எனவே ஸாகித்திய மண்டலப் பரிசில் பெற்ற பொருள் நூல் விற்பனர் முதுபெரும் புலவர் நா. சிவபாதசுந்தரனார் அவர்கள் அனைத்துலக ஐந்தாவது தமிழாராய்ச்சி மகாநாட்டில்



நூலாசிரியர்

சமர்ப்பித்த ,பரவெளித்தத்துவம் என்னுமிச்சிவதத்துவ விஞ்ஞான ஒப்பீட்டாய்வு நூல் விஞ்ஞானக்கண்ணோட்ட ஆய்வு நூலாக விளங்குவதில் வியப்பில்லை.

முன்னுரையிலும், நூன்முகத்திலும் தமது ஆய்வுக்குரிய பொருளின் அடிப்படையைத் தெளிவுபடுத்தி விடும்புலவர், வான் பொருள், வான் பொருள் மலர்ச்சி, வானப் பொருள், காலப்பொருள் என்ற நாற்பெரும் தலைப்புக்களின் தமது ஆய்வை விரித்துள்ளார். முப்பது உபதலைப்புக்களில் விடய விளக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மொழியியல் புலமை, தத்துவஞானம், விஞ்ஞான அறிவு ஒப்பீட்டாய்வு வன்மை, என்ற நாற்படைகொண்டு ஆராய்ச்சிப்போர்புரிந்திருக்கிறார் புலவர்;

புலவரின் ஆராய்ச்சிக்குப் பெரிதும் ஆதாரமாக அமைந்திருப்பது அவருடையமொழியியல் புலமைதான். எத்துணை சாதுரியமாக இவர்தன் மொழியியல் புலமையை உபயோகித்துத் தமது முடிவுகளைநிறுவி விடுகிறார் என்று நூலைப்படிப்போர் வியவாதிருக்கமுடியாது.

'வானம் என்ற சொல வான்+அம் என்று பகுக்கப்படும். அம்—அழகு, நீர் என்ற கருத்துக்களைத்தரும். வானம் அழகாவது, கூர்தற் பொருள்கள் மைப் பொருளாகி மழை

### - லலிதா சகஸ்ரநாமம் -

'அன்பியலின் தத்துவமேயைச் செரிவதாம். வானின் சிவம், சிவதத்துவத்தின் பெரு விளக்கமே பரவெளி 'அம்பலமாவது அகிலசராசரம்' என்ற திருமந்திரம் [2729] பரவெளியினது பொருளை விளக்கமாக்கு கிறது அப்பொருளின் தத்துவ நீர்மையை 'பூதங்கள் ஐந்திற் பொறியில்' என்ற திருமந்திரத்தால் [2684] தெளியலாம், இந்தப்பரவெளித்தத்துவத்தை இந்நூல் செப்புகின்றது' என பொருளாம் வெண்புகையின் மீளுய் ஒளிர்வதற்கும் மழைமேகமாய் ஒலிப்பதற்கும் முதற்கண் அது மைம்மையாதல் வேண்டும். அதாவது 'அம்' என்பது அம்மையாதல்வேண்டும். அம்-நீர். மை-மேகம் நீரையுடைய மேகத்தையே அம்மை என்கிறோம். சித்தாந்திகள் இதனையே சிற்சத்தியாக நினைந்தார்கள்.

[பக். 7]

## நவராத்திரி விரதம்

கடந்த 15-9-81 ''ஈழநாடு'' இதழில் இலங்கைச் சோதிட ஆய்வுமன்றத்தில் 13-9-81 ஞாயிற்றுக்கிழமை ஆராயப்பட்ட எதிர்வரும் நவராத்திரி பற்றிய விஷயம்பற்றி சிறிது எழுதுகிறேன். மேற்படி ஆய்வுமன்றக் கூட்டத்திற்கு நானும் சென்றிருந்தேன். அன்று அங்கு சமுகமளித்திருந்தோர் எட்டு, அல்லது ஒன்பதுபேர் வரையிலிருக்கும் என்பதை நான் அவதானித்தேன். இச்சோதிட ஆய்வுமன்றத்தில் இருப்போர் யாவரும் திருக்கணித பஞ்சாங்க ஆதர

### மக்கள் கருத்து

வாளர் ஆகும். வாக்கிய பஞ்சாங்க ஆதரவாளர் எவரையும் காணவில்லை.

மட்டுவிலிலிருந்து வெளியாகும் திருக்கணித பஞ்சாங்க கணிதராகிய பிரம்மஸ்ரீ சிதம்பரநாதக்குருக்கள் தம்முடைய பஞ்சாங்கத்தில் பிரசுரித்த நவராத்திரி விரதம் சரியென்றும், இதைப்போலவே தஞ்சாவூர் மனோன்மணி வாக்கிய பஞ்சாங்கமும், வேலூர் மணி பஞ்சாங்கமும், கும்பகோண சங்கராச்சார்ய மடத்துப் பஞ்சாங்கமும், சென்னை வாசன் திருக்கணித பஞ்சாங்கமும் 29-9-81 செவ்வாய்க்கிழமையை நவராத்திரி விரதமாகப் பிரசுரித்திருப்பதை ஆதாரம் காட்டி வலியுறுத்திப் பேசினார். இவரால் மேற்கோள் காட்டப்பட்ட மேற்கூறிய பஞ்சாங்கங்கள் எல்லாம் திருக்கணிதமுறையின்படியே கணிக்கப்பட்டுள்ளன.

இந்தியாவிலிருந்து வெளிவரும் ஆற்காடு ஸ்ரீ சீதாராம சர்வமுகூர்த்த சுத்தவாக்கியபஞ்சாங்கமும், ஆற்காடு க.வே. சீதாராம ஐயர் சர்வமுகூர்த்த வாக்கிய பஞ்சாங்கமும், கொக்குவிலிலிருந்து வெளிவரும் இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கமும், துர்மதிஸு புரட்டாதி மாதம் 12ம் திகதி 28-9-81 திங்கட்கிழமை நவராத்திரி விரதம் என்று பிரசுரித்துள்ளதை இச்சோதிட ஆய்வுமன்றம் மூடிமறைத்த காரணம் யாதோ? மேலும் மட்டுவில் பிரம்மஸ்ரீ சி. சுப்பிரமணிய ஐயரால் கணித்து வெளியிடப்பட்ட திருக்கணித பஞ்சாங்கத்தில் வருஷா வருஷம் புரட்டாதி மாதம் 6ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் அமாவாசை 10 மணி 09 நிமிஷம் வரை இருக்க, மறுநாள் திங்கட்கிழமை முற்பகல் பிரதமை 7 மணி 22 நிமிஷம்வரையும் இருக்க, அப்பிரதமைத் தினத்தை நவராத்திரி விரதம் என்று குறிக்காது. அமாவாசை ஷேட தினத்தை நவராத்திரி விரதம் ஆரம்பமாகக் குறிக்கப்பட்டுள்ளது. இதை இச்சோதிட ஆய்வு மன்றம் அறியாதுபோலும். இதைப் போலவே திருக்கணித பஞ்சாங்கத்தில் அமாவாசையுடன் சேர்ந்த பிரதமைத் தினத்தில் நவராத்திரி விரத ஆரம்பம் குறிக்கப்பட்டுள்ளதை இச்சோதிட ஆய்வு மன்றத்தில் அங்கத்தவராயிருக்கும் யாரேனும் வந்தால் காட்டுவதற்குச் சித்தமாயிருக்கின்றேன் என்பதை அறியத்தருகின்றேன். ஆகவே துர்மதிஸு புரட்டாதி

[6ம் பக்கம் பார்க்க]

## தமிழ்நாட்டில்

# அரசாங்க அலுவலகம் முன்பாக மறியல் செய்தவர்கள் விடுதலை

சென்னை, செப். 18 தமிழ் நாட்டின் மாவட்டங்களிலுள்ள அரசாங்க அலுவலகங்களின் முன்பாக இலங்கையில் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை எதிர்த்து மறியல் போராட்டம் செய்த இன் கைது செய்ய முற்பட்ட தி. மு. க. தொண்டர்களை விடுதலைசெய்யுமாறு தமிழ் நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

இலங்கையில் தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறைச் சம்பவங்களை எதிர்த்து தமிழ் நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலுமுள்ள அரசாங்க அலுவலகங்களின் முன்னால் இம்மாதம் 15-ம் திகதி தி. மு. க. தொண்டர்கள் மறியல் போராட்டம் செய்ததும், அதனைத் தொடர்ந்து சுமார் 3,000 தி. மு. க. தொண்டர்கள் கைதுசெய்யப்பட்டதும் தெரிந்ததே.

அதேவேளை சென்னையிலுள்ள இலங்கைத் தூதுவராலயத்திற்கு முன்னால் மறியல் போராட்டம் செய்தபோது கைதுசெய்யப்பட்ட தி. மு. க. தொண்டர்களின் விடுதலை பற்றி தமிழ்நாடு அரசு எதுவும் தெரிவிக்கவில்லை. [வெ

## அவசரச்சட்ட மசோதா நிறைவேறியது.

புதுடில்லி, செப். 18 அவசரச்சட்ட மசோதா இந்திய பாராளுமன்றத்தில் நேற்று நிறைவேறியது. இம் மசோதாவிற்கு எதிர்க்கட்சிகளால் கொண்டுவரப்பட்ட 200 திருத்தங்களும் நிராகரிக்கப்பட்டன.

இம் மசோதா நிறைவேற்றப்படுவதை இந்திய எதிர்க்கட்சிகளும், தொழிற்சங்கங்களும் வன்மையாக எதிர்த்து வந்தது தெரிந்ததே.

அரசாங்க துறைகளில் வேலை நிறுத்தம் செய்வதை இம் மசோதா தடைசெய்வதாக தொழிற்சங்கங்கள் தெரிவித்திருந்தன. (வெ)

சர்வதேச குழந்தைகள் வாரம்:

## யாழ்ப்பாணப் பகுதியிலும் கொண்டாட ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச குழந்தைகள் வாரத்தை, யாழ். மாவட்டத்திலும் கொண்டாடுவதற்கு யாழ். மாவட்ட செயலகமும் திட்டமிட்டுள்ளது.

குழந்தைகள் நலன் பாதுகாப்புத்திணைக்களத்தின் ஆணையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைச் செயலாளருக்கு விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து அக்டோபர் 1-ம் திகதி தொடக்கம் 7-ம் திகதிவரை குழந்தைகள் வாரமாகக் கொண்டாட முடிவுசெய்யப்பட்டுள்ளது.

இதற்கான திட்டங்களை வகுப்பதற்கு, மாவட்ட பரிபாலனத்துக்குப் பொறுப்பான உதவி அரசாங்க அதிபர் திரு. எம். சுப்பிரமணியத்தை தலைவராகவும், யாழ். மாவட்ட குழந்தைகள் செயல் வேலைகளுக்குப் பொறுப்பான திட்டமிடல் அதிகாரி திரு. வி. எஸ். சுவாமிநாதனை செயலாளராகவும் கொண்ட குழு நியமிக்கப்பட்டது.

இதில் வளர்ந்தோர் கல்வி அதிகாரி, குழந்தைநல பாதுகாப்பு உதவி ஆணையாளர், சமூக சேவை உதவிப் பணிப்பாளர், ரோட்டறி, லயன்ஸ் கிளப் தலைவர்கள் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர். (மா)

## ஆளை மோதிவிட்டு ஓடிமறைந்த வான் சந்தேகநபருக்குப் பிணை

(மாவிட்டபுரம்)

ஆளைமோதிவிட்டு ஓடி மறைந்ததாக சந்தேகிக்கப்பட்ட மினிவான் சாரதியை 1000 ரூபா பிணையில் செல்லுமாறும் மினிவானை 10 ஆயிரம் ரூபா பிணையில் எடுத்துச் செல்லுமாறும் மல்லாகம்பதில் நீதிபதி உத்தரவிட்டார்.

அச்சுவேலி இருவர் சீர்திருத்த பாடசாலைக்கு முன்பாக இனந்தெரியாத ஆணின் சடலமொன்று கிடக்கக் காணப்படவே அது தொடர்பாக விசாரணை நடைபெற்றபோது அவ்வழியால் வந்த வாகனம் ஒன்று அவரை மோதிச் சென்றதாக தெரிவிக்கப்பட்டது.

திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா அந்த வாகனத்தை தேடிப் பிடிக்குமாறு காங்கேசன் துறைப் பொலிசாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

இதுபற்றித் விசாரணை செய்த காங்கேசன்துறைப் பொலிசார் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் தகவல் அனுப்பியிருந்தனர்.

இதன்பயனாக வவுனியாவில் நின்ற இந்த சந்தேகத்திற்குரிய வாகனத்தை வவுனியா பொலிசார் கைப்பற்றி காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்திற்கு அனுப்பி வைத்தனர்.

இந்த வாகனத்தையும் சாரதியான வேலுப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை என்பவரையும் மல்லாகம் பதில் நீதிபதி திரு. ரி. தம்பிரத்தினம் முன் ஆஜர் செய்தபோது சாரதியை 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்த பதில் நீதிபதி வானை 10 ஆயிரம் ரூபா பிணையில் எடுத்துச் செல்லவும் அனுமதித்தார்.

## "கருணாநிதியை விடுதலை செய்க"

சென்னை, செப். 18

"சென்னையிலுள்ள இலங்கைத் துணைமிஷனரின் அலுவலகத்திற்கு முன்னால் கடந்த செவ்வாய்க்கிழமை மறியல் போராட்டம் செய்த பெண்களையும், இல தி. மு. க. தொண்டர்களையும் தமிழ்நாடு அரசு விடுதலைசெய்தது போல், அண்மையில் கைது செய்யப்பட்ட தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதியையும் விடுதலை செய்யவேண்டும்."

மேற்கண்டவாறு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் நாடு பிரிவுச் செயலாளர் திரு. பி. மாணிக்கம் தமிழ்நாடு அரசைக் கேட்டுள்ளார். (வெ)

## மாநில அரசுகளை கவிழ்க்கும் நோக்கம் எனக்கில்லை
### லோகசபையில் இந்திரா

புதுடில்லி, செப். 18

"எதிர்க்கட்சிகள் ஆட்சி நடத்தும் மாநில அரசுகளைக் கவிழ்க்கும் நோக்கம் எனக்கு இல்லை. இதுதொடர்பாக என் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளையும் மறுக்கிறேன்."

மேற்கண்டவாறு இந்திய பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி லோகசபையில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

(5-ம் பக்கம் பார்க்க)

## நம்பிக்கையில்லா பிரேரணை தோல்வி

புதுடில்லி, செப். 18

இந்திய மத்திய அமைச்சரவைக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த நம்பிக்கையில்லா பிரேரணை லோகசபையில் நேற்று தோற்கடிக்கப்பட்டது.

இப் பிரேரணைக்கு எதிராக 294 பேரும், ஆதரவாக 83 பேரும் வாக்களித்தனர். [வெ

## "தொழில்நுட்பம், சட்டம் பயிலும் வகையில் தமிழ்மொழி அபிவிருத்தியடையவேண்டும்"
### எம். ஜி. ஆர். கருத்து

சென்னை, செப். 18

'தொழில் நுட்பம், சட்டம் ஆகியவற்றைத் தமிழ்மொழியில் பயிற்றுவிக்கும்வகையில் தமிழ்மொழி அபிவிருத்தி செய்யப்படவேண்டும்.'

மேற்கண்டவாறு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் திறப்பு விழாவில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அவ்விழாவில் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

"தஞ்சாவூரில் தமிழ்மொழியும், கலாசாரமும் விருத்தியடைந்திருப்பதனாலேயே இப் பல்கலைக்கழகத்தை தஞ்சாவூரில் தமிழ்நாடு அரசு நிறுவியது. இந்தப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் அறிஞர்கள் இங்கு அரசியல் நுழையாது பாதுகாத்துக்கொள்ளவேண்டும்.

"இப்பல்கலைக்கழகம் தமிழ் மொழியின் தொன்மைபற்றியும், தமிழ்க் கலாச்சாரம் பற்றியும் பயனுள்ள ஆய்வுகளை மேற்கொள்ளவேண்டும்" என்றார்.

சமூக சீர்திருத்தவாதி மறைந்த ஈ. வெ. ராமசாமிப் பெரியாரின் உருவப்படத்தையும் இப்பல்கலைக்கழகத்தில் முதலமைச்சர் திரைநீக்கம் செய்துவைத்தார். [வெ]





மீண்டும் வந்துள்ளது

மாணவ நண்பன்

Pilot BALL POINT

பைலட் மத்தியதர போல் பாயின்ட்



சிறப்பான எழுத்திற்கு உகந்த பைலட் எங்கும் பெற்றுக்கொள்ளலாம்

ரூ. 1/75

விற்பனையாளர். ஷோ வொலஸ் அன்ட் ஹெஜஸ் கொழும்பு 3. டெலிபோன்:- 20671 - 9

SRI COMMUNICATION

# "எம்மில் ஒருசாராரை அடக்க முயல்வது இழிவான செயல்"

## யாழ். மாவட்டசபைத் தலைவர் கூறுகிறார்

(கோண்டாவில்)

எம்மை ஒரு சாரார் அடக்குகின்றீர்கள் என்று கூறி போராட்டம் நடத்துகின்ற இந்நேரத்தில் எம்மிடையே நாம் ஒரு சாராரை அடக்க முயற்சிக்கக்கூடாது இது மிகவும் பாவம்மிக்கதும் இழிவான ஒரு செயலுமாகும்! பொதுவாக பொருளாதார ரீதியில் மக்களிடையே வேறுபாடு காணப்படலாமேயன்றி சாதியென்ற அடிப்படையில் வேறுபாடுகாணப்படலாகாது.

மேற்கண்டவாறு யாழ் மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவர் திரு. சு. நடராசா குறிப்பிட்டார்.

தாவடி தெற்கு [illegible] அம்மாள் சனசமூகநிலையத்தின் 7வது ஆண்டுவிழாவில் உரையாற்றுகையில் கூறினார்.

நிலையத்தலைவர் திரு. க. உலகநாதன் தலைமையில் நடைபெற்றவிழாவில் பிரதமவிருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய திரு. நடராசா மேலும் கூறியதாவது:

இன்று நிலையத்தலைவர் பேசும்பொழுது இப்பகுதி மக்களுக்கு மின்சாரம் இல்லாமையையும் அதனால் அவர்படும் கஷ்டத்தையும் கூறியதுடன் தொகுதி எம். பி. யினால் பணம் ஒதுக்கப்பட்டும் இன்றுவரைக்கும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென்று குறிப்பிட்டார். நான் இதற்கான காரணத்தை இதனுடன் தொடர்புடைய அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பேன்.

இன்று எம்மிடையே கயிறு இழுத்தல்போட்டி நடைபெறுகின்றது. இக் கயிறு இழுத்தல்போட்டியில் நாம் ஒற்றுமையாக இருந்து எமது எதிரிகளை இழுப்போமானால் நிச்சயமாக அதில் வெற்றிபெறமுடியும். நாடு அபிவிருத்தியடைய வேண்டுமாக இருந்தால் அது கிராமங்களின் அபிவிருத்தியிலேயே தங்கியுள்ளது. மக்கள் தமது பிரச்சினைகள் பற்றி நேரடியாக என்னுடன் தொடர்புகொள்வார்களேயானால் நான் அவற்றுக்கான தீர்வினை [illegible]கொள்ளமுடியும்.

யாழ் மாவட்ட அபிவிருத்தி சபையின்கீழ் 45 கிராமசபைகளும் 9 பட்டினசபைகளும் அடங்கியுள்ளன. இவை மக்களின் தேவைகளை சுலபமாக பூர்த்தி செய்வதற்காக தொடர்ந்தும் இயங்கிக்கொண்டே இருக்கும். இவற்றுக்கு நாம் வெகுவிரைவில் பொறுப்புவாய்ந்த அதிகாரிகளை நியமிக்க உள்ளோம். அவர்கள் மூலமும் உங்களின் பகுதிப் பிரச்சினைகளை எமக்கு அறிவிக்கலாம். எம்மிடையே ஏற்றத்தாழ்வுகள் சாதியடிப்படையில் காணப்படுகின்றது. இதனை ஒழிக்கவேண்டும். காந்தி மகான் குறிப்பிட்டதைப் போன்று எல்லோரும் கடவுளின் பிள்ளைகள் என்று கூறிக்கொள்ளவேண்டும்.

தொடர்ந்தும் நாம் தாழ்த்தப்பட்டவர்கள் என்று கூறி எம்மை நாமே தாழ்த்திக் கொள்ளக்கூடாது. இந்நிலை ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக நிலவிவந்துள்ளது. ஆனால் இன்று எம் இளைஞர்கள் மூலம் இந்நிலைமாற்றம் அடைந்துவருகிறது போற்றற்குரியது. (இ)

## ஆலய...

(2-ம் பக்க தொடர்ச்சி)

முறைப்பாட்டின் பிரகாரம் பொலிசார் விசாரணை மேற்கொண்டபோதிலும் தாயை கண்டுபிடிக்க முடியவில்லை.

சிசுவை கண்டெடுத்த அந்நபர் தனது பராமரிப்பில் வைத்து வளர்த்து வருகின்றார்.

## மாநில

(4ம் பக்கத் தொடர்ச்சி)

"எந்தவொரு மாநில அரசையும் நான் கவிழ்க்க விரும்பவில்லை. நான் மாநிலங்களுக்கு விஜயம்செய்திருந்தபோது மாநில முதலமைச்சர்கள் என்னைச் சிறப்பானமுறையில் வரவேற்றனர்.

"எமது நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. பணவீக்கம் தற்போது பெருமளவில் குறைந்துள்ளது. வெளிநாட்டுக் கொள்கை தொடர்பாக திட்டவட்டமான கொள்கையை எமது அரசு கடைப்பிடித்து வருகிறது.

"நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு சர்வதேச கடனுதவி அவசியம். கள்ளக்கடத்தல்காரரை விடுவித்தது முன்னைய ஜனதா அரசுதான் என்றார். (வை)

## நிமிடத்துக்கு 1 கோடி அமெரிக்கடாலர் ஆயுதத் தேவைக்காக செலவாகும் பணம்

(கண்டி)

உலகின் ஆயுததேவைகளுக்காக, ஒவ்வொரு நிமிடமும் 1 கோடி அமெரிக்கன் டாலர்கள் செலவுசெய்யப்படுகின்றன. இத் தகவலை வெளிநாட்டமைச்சர் ஏ. ஸி. எஸ். ஹமீது கண்டியில் நடந்த பரிசளிப்புவைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

இத்தகைய பயங்கரங்களாலேயே இலங்கை சர்வதேச ரீதியில் ஆயுதப்போராட்டங்களுக்கும், உத்திகளுக்கு எதிராகப் பிரசாரங்களை நடத்துவதாக அவர் தெரிவித்தார்.

வெளிநாட்டமைச்சர் ஜனாப் ஹமீது மேலும் தமது உரையில் உலகநாடுகளுக்கிடையே பிணக்குச்சச்சரவுகளும், சண்டைகளும் ஏற்பட எல்லைப் பிரச்சினைகளே காரணமாகவிருப்பதாகவும் இச் சச்சரவுகளையொத்த பிரச்சினைகளையே சிறியஅளவில் எமது கிராமங்களிலும் காணக்கூடியதாக இருக்கின்றன எனவும் தெரிவித்தார்.

எல்லைப்பிரச்சினைகளால் ஏற்படும் பெரும்போர்கள் அண்டைநாடுகளுக்கும் உலக நாடுகளுக்கும் பெரும் அச்சுறுத்தலாகவிருப்பதாக ஜனாப் ஹமீது கவலை தெரிவித்தார் (இ)

## இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 3-ம் திகதி சனிக்கிழமை

(19-9-81)

மேடம்: முன்னாள் ஆசிரியர் ஒருவர் உமது முன்னேற்றத்துக்கு வழிகாட்டுவார். அடக்கமான நடவடிக்கையின் மூலம் மற்றவர்களின் மனதைக் கவருவீர்கள். இறை நம்பிக்கை மேலோங்கும்.

இடபம்: அன்னியர்கள் சகவாசம் சங்கடத்தில் மாட்டிவைக்கும். அவசர முடிவின் மூலம் சில துன்பங்கள் விளையலாம். எதிரிகளின் சூழ்ச்சிகள் மன நிம்மதியைக் குறைக்கும். தொழிலிலும் நிம்மதி கிடைக்கும்.

மிதுனம்: இலாபகரமான தொழிலில் முதலீடு செய்வீர்கள். வாகனச் சொந்தக்காரர்களுக்கு வருமானம் கிடைக்கும். தாய்வழியால் தனவரவுக்கு இடமுண்டு.

கடகம்: இதயத்தில் ஏக்கம் இன்று தணியும். தேடிய பொருள் காலடியில் சரணடையும். பரோபகாரச் சிந்தை மேலிடும். நண்பர் ஒருவர் கைகொடுத்து உதவுவார். செல்வாக்குப் பெருகும்.

சிம்மம்: ஆவேச வாசம் உங்களைத் துயரத்தில் ஆழ்த்தும். எதிர்பாராத விபத்துக்கு இடம் ஏற்படலாம். ஆயுதங்களுடன் பழகுபவர்களுக்கு அவதானம் வேண்டும்.

கன்னி: போதுமென்ற மனத்துடன் செயலாற்றுவீர்கள். சாஸ்திர வழியால் பெருமைகள்வந்துசேரும். ஆவலுடன் எதிர்பார்க்கும் கடிதமொன்று கிடைக்கலாம்.

துலாம்: எண்ணியதில் தடைகள் தோன்றும். ஏமாற்றம் தாக்கும். நண்பர்களும் காலைவாரிவிடக்கூடும். நிதானம் வேண்டும்.

விருச்சிகம்: இன்று முன்னணியில் நிற்பீர்கள். நல்ல திருப்பு வருகிறும் சந்தர்ப்பமும் ஏற்படலாம். தெய்வ நம்பிக்கை மேலோங்கும். குறிக்கோளில் வெற்றியுண்டு.

தனுசு: வணிகர்களுக்கு வியாபார விருத்திக்கு இடமுண்டு, புதிய முயற்சிகள் இன்று கைகூடும். செலவினங்கள் கைக்கடங்கி இருக்கும்.

மகரம்: நினைத்த காரியத்தில் வெற்றியுண்டு, எதிர்த்தவர்களே உங்களை பாராட்டிச் செய்வார்கள். பணிவகாரத்தில் நல்ல திருப்பம் ஏற்படும். நல்ல தினம்.

கும்பம்: மனதில் விரக்தி நிலை தென்படும். உடல் நலமும் பாதிக்கப்படலாம். கால்நடைகளினால் நஷ்டம் ஏற்படும். பூமிப்பிணக்குகள் மூலம் வழக்கு விவகாரங்கள் ஏற்படலாம்.

மீனம்: நீண்ட நாள் கடன் இன்று நிவர்த்தியாகும். பிணியாலும், உங்கள் உதவிக்கு புத்திரர் விரைவர், சிறப்புண்டு.

சோதிட [illegible]நிதி
திருமலை க. வேலுப்பிள்ளை


**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சி
சிவகுமார் - லட்சுமி
அவன்-அவள் அது (ஈஸ்ட்மன்கலர்)

**லிடோ** யாழ் நகர் தினசரி 4 காட்சிகள்
அலாவுதீனும் அற்புதவிளக்கும்

**சாந்தி** (யாழ் நகர்) 10-30, 2-30, 6-15 & 9-45
தமிழகத்தில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தி வெள்ளிவிழா கொண்டாடிய வெற்றிச் சித்திரம்.
காதல் இளவரசன் கமலஹாசன் — விழி அழகி ஸ்ரீ தேவி
முத்துராமன், சுந்தரராஜன், நம்பியார்
வெண்ணிற ஆடை நிர்மலா, பண்டரிபாய்
குரு
இசை: இளையராஜா
—ஈஸ்ட்மன் வண்ணத் திரை ஓவியம்—

**ராஜா** (யாழ்ப்பாணம்) தினசரி 10-30, 2-15, 6-00, 9-30
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா - நாகேஷ்
ராமன் தேடிய சீதை
(ஈஸ்மன் கலர்—புதிய பிரதி)

ஈழத்து எம். ஜி. ஆர். காமினியின் அற்புத நடிப்பைக் காண இன்னும் சில தினங்கள் மட்டும்.
**வின்ஸர்** தினசரி 4 காட்சிகள்
★ காமினி ★ ஸ்ரீபிரியா ★ ராதாசலூஜா
நீலக்கடலின் ஓரத்திலே
([illegible] கலர்)

**மனோகரா** (யாழ்ப்பாணம்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
ஜெமினி - முத்துராமன் - எம். ஆர். ராதா
கே. ஆர். விஜயா - சாவித்திரி - மனோரமா
நடித்த
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி
கற்பகம்

**ராணி** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
★ சுதாகர் ★ பாக்கியராஜ் ★ சுமதி
மற்றும் பலர் நடித்த
சுவர் இல்லாத சித்திரங்கள்

5-வது வாரம்
**ஸ்ரீதர்** (யாழ் நகர்) தினசரி 10-30, 2-30, 6-15, 9-30
மஞ்சுபார்கவி — [illegible]
சங்கராபரணம் (கலர்)

**REGAL ரீகல்** DAILY 5 SHOWS
ஞாயிறுவரை மட்டும்
FIST OF FURY

21 திங்கள் முதல்
"ஜங்கிள் புக்"
காட்சி நேரம்: 10-30, 2-15, 4-45, 7-00, 9-30




21 முதல் 27 வரையும் காண்பிக்கப்படும்
பாடசாலைகள் முன்கூட்டியே பதிவு செய்துகொள்ள தொலைபேசி இல. 360 தொடர்புகொள்க.

**ஹரன்** (யாழ் நகர்) தினசரி 4 காட்சிகள்
MADMAX

**[illegible]** ([illegible]) தினசரி 2-30, 6-30
சிவாஜி
தர்மராஜா

**[illegible]ம்ஸ்** (சுன்னாகம்) தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - ஸ்ரீதேவி
பட்டாக்கத்தி பைரவன்

# அப்பா, அம்மா, அக்கா மூவரையும் எதிரி கிறிஸால் குத்தினுர்

## திருநெல்வேலி இரட்டைக் கொலை வழக்கில் சிறுமி சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

'எதிரி இராசரத்தினம் வந்து அக்காவுடன் கதைக்கவேண்டும் என்ருர் இன்றைக்கு கதைக்கமுடியாது என்று அம்மா கூறினுர். எதிரி போகாமல் இருந்துவிட்டார். அப்பா வந்து ஆங்கிலத்தில் பேசினுர். அதன்பின் வெளியில் சென்ற எதிரி கதவை உதைத்தார். பார்க்கச் சென்ற அப்பாவுக்கு கிறிஸினுல் குத்தினுர். அம்மா ஓடிப்போக அவவுக்கும் குத்து விழுந்தது. அதன்பின் மூத்த அக்காவுக்கும் குத்துவிழுந்தது. பின் எதிரி ஓடிவிட்டார்''

திருநெல்வேலி இரட்டைக் கொலை வழக்கு விசாரணையின் போது சாட்சியமளித்த 14வயதான மாணவியான மகாலட்சுமி மேற்கண்டவாறு கூறினுர்.

இவ்வழக்கு யாழ் நீதிமன்றத்தில் நீதவான் திரு. ரி. ஜோகநாதன் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில், திருநெல்வேலியில் 80 ஜூன் 17ம் தேதி நவரத்தினத்தையும், அவரது மனைவியையும் கொலைசெய்ததாக, இராசரத்தினம் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர் தவராசா, சட்டத்தரணி கனகசபாபதி ஆகியோர் ஆஜராஞர்கள். வழக்காளி தரப்பில சட்டத்தரணி யோகநாதன், கோப்பாய் பொலிஸ் சார்ஜன் துரைசிங்கத்தின் உதவியுடன் ஆஜராஞர்.

மாணவி மகாலட்சுமி சாட்சியமளிக்கையில் தொடர்ந்து கூறியதாவது:

''80 ஜூன் 17ம் திகதி எனது தாயாரும் தகப்பனுரும் இறந்தது ஞாபகமிருக்கிறது. அன்று எனது பெற்ருேருடன் திருநெல்வேலியில் வசித்துவந்தேன். அன்றிரவு 9-30மணிக்கு நான் படித்துக்கொண்டிருந்தேன். எனது சகோதரி இந்திராணியும் என்னுடன் படித்துக்கொண்டிருந்தார். மூத்த அக்கா ரஞ்சிதமலர் உடுப்புப் பெட்டி அடுக்கிக்கொண்டிருந்தார் அச்சமயம் அப்பா பின்புறமாகப் படுத்திருந்தார். அம்மா பின்பக்கமாக இருந்தார். அந்நேரத்தில் எங்கள் வீட்டு முன்கதவு உட்புறமாக கொழுக்கி போட்டுப் பூட்டியிருந்தது ஒரு கட்டத்தில் 'ரஞ்சி ரஞ்சி' என்று அழைக்கும் சத்தம் கேட்டது. அம்மா! கதவை யாரோ தட்டுகிருர்கள் என்றும் திறக்கச் சொல்லுமாறும் கூறினுர் ரஞ்சிதமலர் சென்று கதவைத்திறந்தார். எதிரியான இராசரத்தினம் அக்காவுடன் கதைக்கவேண்டுமென்று கூறினுர். அம்மா கதைக்கமுடியாது என்றும் பெண்பிள்ளைகள் இருக்கும் இடத்தில் கதைக்கவேண்டாம் போகலாம் என்றும் சொன்ஞர் எதிரி போகாமல் இருந்துவிட்டார். அப்பொழுது அம்மா அப்பாவிடம் முறையிட்டார். அப்பா வந்து ஆங்கிலத்தில் 'கெற்அவுட்' வெளியில்போகலாம் 'பிளடிபூல்' என்று ஏசினுர். அதன்பின் எதிரி 'இருங்கோ வருகிறன்' என்று கூறிவிட்டு வெளியில் சென்றுவிட்டார். அதன்பின் அம்மா அக்காவை கதவை இழுத்துப் பூட்டும்படி சொன்ஞர். அக்கா கதவைப் பூட்டினுர்.

இதன் பின்னர் கதவை உடைக்கும் சத்தம்கேட்டது. அப்பா, யார் என்று பார்க்கச் சென்றபோது கதவு திறக்கப்பட்டது. உடனே அப்பாவுக்கு எதிரிகிறிசால்குத்தினுர். அப்பா கத்திக்கொண்டு விழுந்துவிட்டார். அறையின் உட்புறத்திலிருந்து அம்மா ஓடிப்போன போது அம்மாவுக்கும் குத்து விழுந்தது. அம்மாவெளியில் விழுந்துவிட்டார். அதன்பின்னர் மூத்த அக்காவாகிய ரஞ்சிதமலருக்கும் குத்துவிழுந்தது. அக்காவும் வெளியில் விழுந்துவிட்டார். எதிரி ஓடிவிட்டார். எங்கள் அறையில் விளக்கு கொழுத்தப்பட்டிருந்தது. எப்பொழுது நூர்ந்தது என்று எனக்கு தெரியாது. சம்பவம் நடந்தபொழுது வெளிச்சம் இருந்தது. வீதியில் மின்சார வெளிச்சம் உள்ளதால் எல்லாவற்றையும் கண்டேன் எதிரி முதல்முறையாக எங்கள் வீட்டுக்கு வரும்பொழுது துவிச்சக்கரவண்டியில் வந்து சொன்ஞர் எதிரி அன்று வீட்டுக்குவரும் பொழுது வேட்டியுஞ்சேர்ட்டும் அணிந்திருந்தார்

## முன்னுள் நீதவான் இறுதி ஊர்வலம்

[யாழ்ப்பாணம்]

காலஞ்சென்ற முன்னுள் மேல்நீதிமன்ற நீதிபதி திரு. ரி. ஜே. ராஜரத்தினத்தின் இறுதி ஊர்வலம் இன்று சனி பிற்பகல் 4 மணிக்கு சுண்டிக்குளி சோமசுந்தரம் ஒழுங்கையிலுள்ள அன்னரது இல்லத்திலிருந்து புறப்பட்டு, துண்டி மயானத்தில் கிரியைகள் நடைபெறும். [அ]

## இன்று

[யாழ்ப்பாணம்]

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை இல்லங்களுக்கிடையிலான வருடாந்த மெய்வல்லுநர் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் கல்லூரி மைதானத்தில் அதிபர் திரு. இ. கனகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. [அ]

## பாவனைக்குதவாத

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அதிகாரிகள்எடுத்துக்கொண்டதுடன் மறுஅறிவித்தல்வரை பிடிக்கப்பட்ட அரிசியை பத்திரமாக வைத்திருக்கும்படியும் உத்தரவிட்டுள்ளனர்.

## நவராத்திரி...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

மாதம் 12ம் திகதி [28-9-81] திங்கட்கிழமை அன்றே நவராத்திரி விரதமாகும்.

க. ச. இளையதம்பி
மாதனை,
தெல்லிப்பழை.

## காண்ஸ்டபிள் அடித்து கொலை?

(கழுத்துறை)

கட்டுக்குருந்த பொலிஸ் பயிற்சி நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் அப்பகுதியிலுள்ள கள்ளுத்தவறணையொன்றில் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார். இவருடன் இன்னுமொரு கான்ஸ்டபிள் கூடச் சென்றிருந்த போதிலும் அவர் எவ்வித இடையூறுமின்றி நிலையத்திற்குத் திரும்பியுள்ளார்.

கட்டுக்குருந்த பொலிசார் இக்கொலை சம்பந்தமாக தீவிர விசாரணைகளை நடத்திவருவதுடன் மூன்று சந்தேகநபர்கள் மீது வலைவிரித்துள்ளனர். மேலும் கூடச்சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள் மீதும்ஒழுங்குநடவடிக்கை எடுக்கவிருப்பதாக அறிவித்துள்ளனர். இக்கான்ஸ்டபிள் தனது சகாவிற்குநடந்ததை உடனே வந்துமுறைப்பாடு செய்யாது நீதிபதியின் விசாரணைகளின்போதே நடந்தவை பற்றி விளக்கினுராம்.

இவ்விரு கான்ஸ்டபிள்களும் சம்பவம் இடம்பெற்ற தினமான கடந்த புதன்கிழமையிரவு தமது கடமைகள் முடிவடைந்தபின்பே அருகிலிருந்த மேற்படி கள்ளுத்தவறணைக்குச் சென்றனராம். (கி)

## கைதிகள் மீது

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தத் திகில் நாடகம் அரங்கேறி முடிகிறது.

பஸ் நின்ற இடத்திலிருந்து சுமார் 300 யார் தூரத்துக்கப்பால் வல்லை கிராய்க்குளத்துக்கருகில் தலைவேறு முண்டம் வேருகவும். துப்பாக்கி காயங்களுடனும் கோடரியால் வெட்டப்பட்ட காயங்களுடனும் இராசதுரை அப்புத்துரை என்பவரின்சடலம் கிடக்கக்காணப்பட்டது. இச்சடலத்துக்கு பக்கத்தில் கைக்கோடரி ஒன்றும் பொலிசாரால் கண்டெடுக்கப்பட்டது.

தெற்குப் புறமாக சுமார்150 யார் தூரத்தில் இராசதுரை துரைராசா என்பவரின் சடலம் நெஞ்சில் சூடும், வெட்டுக் காயங்களுடனும் கிடக்கக் காணப்பட்டது.

இராசதுரை தேவராசாவின் சடலம் பஸ் நின்ற இடத்துக்கு சுமார் 300 யார் தூரத்தில் வடமேற்குப் புறத்தில், துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடனும் விரல்கள் வெட்டப்பட்டும் கோரமான நிலையில் கிடக்கக் காணப்பட்டது.

மீதிக் கைதிகளில் ஒருவரான தில்லைநடராசா என்பவர் பலத்த காயங்களுடன் தனியார் வாகனம் ஒன்றில் மந்திகை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு சத்திரசிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளார். சத்திர சிகிச்சையின் போது இவரது அடிவயிற்றிலிருந்து துப்பாக்கிச் சன்னங்கள் வெளியில் எடுக்கப்பட்டன.

இராசதுரைதங்கராசாபற்றி இச்செய்தி அச்சுக்குப்போகும் வரைஎதுவித தகவலும் தெரியவில்லை.

இவர்கள் தவிர ஆறு கைதிகளில் வே. மகேந்திரன் என்பவர் மட்டுமே சம்பவம் நடந்த இடத்துக்கு அண்மையிலுள்ள பள்ளத்துக்குள் மயங்கிக் கிடக்கக் காணப்பட்டு சிறைச்சாலைப் பாதுகாவலரினுல் பருத்தித்துறை நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லப்பட்டார். பருத்தித்துறை நீதவான் திரு. எஸ். மகேசன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நடைபெற்ற இடத்தை நேற்று பகல் முதல் மாலை ஐந்து மணிவரை ஏராளமான மக்கள் சென்று பார்வையிட்டனர்.

யாழ். உதவிப் பொலிஸ்அதிபர் எஸ், நவரட்ணராசா ஸ்தலத்துக்குச் சென்று பார்வையிட்டார். பருத்தித்துறை. வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளும் ஸ்தலத்துக்குச் சென்று பார்வையிட்டனர்.

பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் திரு. கே. எஸ். மகேசன் நேற்றுமாலை4-30மணிக்கு ஸ்தலத்துக்குச்சென்றுபார்வையிட்டு பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

நேற்று மாலை 6 மணிக்கு 3 கைதிகளின் சடலங்களும் மந்திகை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

மேல் விசாரணை 5ம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது. விசாரணை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நடைபெறும்.

### பிடிவிருந்தில் தேடப்பட்டவர்கள்

கம்பர் மலையில் முன்னர் நடைபெற்ற மற்றுமொரு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் பலியானதைத்தொடர்ந்து கந்தையா நாராயணசாமி, நாராயணசாமி அழகேஸ்வரன் ஆகியோர் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு பிணையில் விடப்பட்டிருந்தனர்.

இவர்கள் இருவரும் நேற்று பருத்தித்துறை நீதிமன்றத்தில ஆஜராகுமாறு நீதவானுல் உத்தரவிடப்பட்டிருந்தும் அவர்கள் சமுகமளிக்காததால் பிடிவிருந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது. [மா]

## அரங்கேற்றம்

(யாழ்ப்பாணம்)

உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. சி. செபநாயகத்தின் புதல்வி செல்வி ஜோசப்பின் திருமகளின் பரத நாட்டிய அரங்கேற்றம் இன்று சனிக்கிழமை மாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுகின்றது. [மா]


ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்
ஆரம்பித்திருக்கும்
உல்லாச பஸ் சேவை

யாழ்ப்பாணம் - கொழும்பு - யாழ்ப்பாணம்
கண்ணியமான, பாதுகாப்பான பஸ்சேவை

யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படுதல்:
செவ்வாய், வியாழன், ஞாயிற்றுக்கிழமைகளில்

கொழும்பிலிருந்து புறப்படுதல்:
திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில்

யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுமிடங்கள்:

(1) ஹோம் பினன்ஸ் லிமிட்.
இல: 82, கன்னதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: இல: 8310

(2) யாழ். மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்,
தொலைபேசி: இல: 7596.

கொழும்பில் டிக்கட் பெறும் இடங்கள்

ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்
463, காலி வீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190.

ரவிந்திரா ஸ்டோர்ஸ்
285, காலி வீதி, வெள்ளவத்தை.

J. M. S. மிராண்டாஸ்
109, ஓல்கொட் மாவத்தை, புறக்கோட்டை.

நியூ புஷ்பா ஸ்டோர்ஸ்
127, காலி வீதி, பம்பலப்பிட்டி
தொலைபேசி இல: 88866

டிக்கட் விலை: ரூபா 65-00



## மரண அறிவித்தல்

### திருமதி கி. மு. செல்வத்துரை

ஒய்வுபெற்ற தலைமை ஆசிரியை திருமதி கி. மு. செல்வத்துரை [யாழ் ஆனைப்பந்தி மெ. மி. பாடசாலை] காலமானுர். இவர் ஜே. எம். செல்வத்துரை [ஒய்வு பெற்ற ஆசிரியர் யாழ். மத்திய கல்லூரி] யின் மனைவியும், திருமதி ஜெயகுலராசா [முஸ்லிம் மகாவித்தியாலயம், புல்மோட்டை] Dr செல்வத்துரை [பண்டத்தரிப்பு], திருமதி மகேந்திரா [முஸ்லிம் மகளிர் கல்லூரி, பம்பலப்பிட்டி], செல்வி ஆகியோரின் தாயாரும், Dr ஜெயகுலராசா, இரஞ்சினி, மகேந்திரா ஆகியோரின் மாமியாரும், மலர்நங்கை, இளஞ்செல்வன் சேரலாதன், தமயந்தி ஆகியோரின் பேத்தியுமாவர் நல்லடக்கம் இன்று சனிக்கிழமை [19 9-81] மாலை 4 மணிக்கு பண்டத்தரிப்பில் நடைபெறும். உறவினர்களும் நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும். 0997



RADIO OFFICERS — P. M. G. Cert. Apr. 82

மற்றும் வெல்டிங் [Electric & Gas] வயறிங் முதலிய பயிற்சிகள். வெளிநாடுகளிலும் கப்பல்களிலும் தொழில்கள் பெற ஏற்றவை. நவீன முறையில் பொறியியலாளர்களால் நடாத்தப்படும். ஆங்கிலம் இலவசம். இலவசக் கையேட்டிற்கு விண்ணப்பிக்கவும்.

NATIONAL INSTITUTE OF ENGINEERING TECHNOLOGY

57, 58, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகையாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி, 68-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாடு' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி 308ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் 19-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a NewsPaper at the General Post office: Sri Lanka. Regd. Q. B. 100236/81. P. O. Box 49. Jaffna. தொலைபேசி, 7707, 889, 8186.